கார்ல் மார்க்ஸ் பிறந்த நாளில் – ‘எல்லோர்க்கும் எல்லாம்’ என்ற

# இலட்சியப் பயணத்தில் வென்றிட உறுதி கொள்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, மே.6-

பொதுவுடமை கருத்தியலை வழங்கிய கார்ல் மார்க்ஸ் பிறந்த நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ‘எல்லோர்க்கும் எல்லாம்’ என்ற இலட்சியப் பயணத்தினை வென்றிட உறுதி ஏற்போம் என்று குறிப்பிட்டுள்ளார்.

கார்ல் மார்க்ஸ் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

சமத்துவ உலகைக் கட்டமைப்பதற்கான பொதுவுடைமைக் கருத்தியலை வழங்கிய கார்ல் மார்க்ஸ் அவர்களின் பிறந்தநாளில், ‘எல்லோர்க்கும் எல்லாம்’ என்ற இலட்சியப் பயணத்தில் வென்றிட உறுதிகொள்வோம்!

உழைப்போர்க்கு உறுதுணையான மார்க்சியச் சிந்தனையை எடுத்து இயம்பிட, கன்னிமரா நூலக நுழைவுவாயிலில் அவரது திருவுருவச் சிலையினை நிறுவு வதற்கான இடத்தை நானே நேரில் சென்று தேர்வு செய்து, சிலை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது!

சிலையாக எழுந்து நிற்கவுள்ள மாமனிதர் மார்க்சின் சிந்தனைகள், மானிடச் சமுதாயத்துக்கு என்றும் ஒளி வழங்கட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.





# தி.மு.க. இளைஞர் அணி

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

**ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!**

விருதுநகர் வடக்கு மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 06.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | சிவகங்கை | ராஜேஸ்வரி மஹால், சிவகங்கை சாலை, திருப்பத்தூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

நெல்லை ரெட்டியார் பட்டி மலைப்பகுதியில் ரூ.33 கோடியில்

# பொருநை அருங்காட்சியகப் பணிகள் ஆகஸ்ட் மாதம் முடிக்கப்பட்டு முதல்வரால் திறக்கப்படும்!

## நெல்லையில் அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!



நெல்லை, மே 6 -

நெல்லை ரெட்டியார் பட்டி மலைப்பகுதியில் 33 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வரும் பொருநை அருங்காட்சியக பணிகள் முழுவதும் ஆகஸ்ட் மாதம் முடிவடைந்து முதலமைச்சர் அவர்களால் திறக்கப்படும் என்றும் மேலும் நெல்லையில் ரூபாய் 100 கோடி மதிப்பில் அமைய உள்ள நூலகத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. இதன் கட்டுமானப் பணிகள் இந்த நிதியாண்டிலேயே தொடங்கப்படும்

என நெல்லையில் பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ. வேலு தெரிவித்தார்.

நெல்லை ரெட்டியார் பட்டி மலைப்பகுதியில் 33 கோடி ரூபாய் மதிப்பில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதில் ஆதிச்சநல்லூர், கொற்கை, சிவகளை ஆகிய பகுதிகளில் அகழாய்வில் சேகரிக்கப்படும் பொருட்கள் இங்கு வைக்கப்படுகிறது. இதற்கான கட்டுமானப் பணிகளை பொது ப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். கட்டுமானத்தின் தரம், அங்கு பயன்படுத்தும் டைல்ஸ் உள்ளிட்ட கட்டுமான பொருட்களின் தரம் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து பொதுப்பணித்துறை அதிகாரிகளுடன் பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார். மேலும் பணிகளை விரைந்து முடிக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து நெல்லை பாளையங்கோட்டை பகுதியில் புதிதாக கட்டப்பட இருக்கும் நூலகத்தின் இடத்தை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ வேலு ஆய்வு மேற்கொண்டார்.

அதனை தொடர்ந்து அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது.

தமிழர்கள் நாகரிகத்தை ஆய்வு செய்து ஆதிச்சநல்லூர், சிவகளை கொற்கை ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை காட்சிபடுத்த முதலமைச்சர் அவர்கள் 18.05.2023 ல் அடிக்கல் நாட்டி பொருநை அருங்காட்சியகம் பணிகள் நடந்து வருகிறது. 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கான அனைத்து வசதிகளுடன் அருங்காட்சியகம் அமைகிறது. 13 ஏக்கர் நிலத்தில் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு வரும் நிலையில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. ஜூன் முதல் வாரத்தில் அகழாய்வில் கிடைத்த பொருட்கள் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட உள்ளது. மும்பை மற்றும் சென்னையை சேர்ந்த நிறுவனங்கள் காட்சி படுத்தும் பணிகளை 2 மாதம் மேற்கொள்வார்கள். ஆகஸ்ட் மாதத்தில் அருங்காட்சியக பணிகள் அனைத்தும் நிறைவு பெற்று முதலமைச்சர் அவர்களால் திறக்கப்படும். தென் மாவட்டங் களுக்கு முதலமைச்சர் அவர்கள் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்து கட்டமைப்புகளை உருவாக்க உத்தரவிட்டு அதன் அடிப்படையில் பணிகள் அறிவிக்கப் பட்டு நடந்து வருகிறது.

நெல்லை குலவணிகர் புரத்தில் Y வடிவ பாலம் அமைக்க வேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் ஆவுடையப்பன், அப்துல்வஹாப் எம்.எல்.ஏ ஆகியோர் முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்தனர். அவர்களது கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அமைக்கப்படும் Y வடிவ பாலத்திற்கான நில எடுப்பு பணிகள் நடந்து வருகிறது. இதற்காக 99 கோடி ரூபாய் மதிப்பில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு விரைவில் ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் தொடங்கும். திராவிட மாடல் ஆட்சியில் கல்விக்கும், மருத்துவத் துக்கும் முதலமைச்சர் அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். முதல்வர் அவர்களின் ஆட்சி அமைந்த பின்னர் தான் நூலகங்கள் அதிகளவில் அமைக்கு நடவடிக்கை எடுத்தார்கள். அதன் அடிப்படையில் சென்னை மதுரையில் நூலகம் அமைக்கப்பட்டது. திருச்சியில் பணிநடந்து வருகிறது. தற்போது நடந்த சட்டமன்ற கூட்ட த்தொடரில் நெல்லை, கடலூர், சேலம் ஆகிய மூன்று மாவட்டங் களில் நூலகம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பாளையங்கோட்டை பகுதியில் நூலகம் அமைப்பதற்கான இடத்தினை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தேர்வு செய்து கொடுத்துள்ளனர். அதனை ஆய்வு செய்து இருக்கிறோம் புதிதாக அமையவிருக்கும் நூலகம்76 ஆயிரம் சதுர அடியில் அமைய உள்ளது. இந்த நூலகம் மருத்துவக் கல்லூரி மாணவர்களும் பயன்பெற வேண்டும் என்பதற்கும் பொருத்தமான இடம் தான். 250 இருக்கையுடன் கூடிய ஆடிட்டோரியம் அமைக்கப்பட உள்ளது.

நெல்லை மேற்கு புறவழிச்சாலை 33 கிலோமீட்டர் தூரத்தில் அமைகிறது , 11 கிலோமீட்டர் தூரத்திற்கு 160 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது, மீதமுள்ள 22 கிலோமீட்டர் தூரத்திற்கு நிலம் எடுக்கும் பணிகள் நடந்து வருகிறது. மேலும் நூலகத்திற்கான கட்டுமானப் பணிகள் இந்த நிதி ஆண்டிலேயே தொடங்கப்படும். தமிழக நெடுஞ்சாலைகளில் வெளிநாட்டு வாகனங்களின் பெருக்கம் காரணமாக வேகம் தெரியாமல் சென்று விபத்துக்குள் உருவாகிறது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விபத்து 14 சதவீதம் குறைந்துள்ளது. தாராபுரம் பகுதியில் நடந்து வரும் பாலம் கட்டுமான பணியிடத்தில் ஏற்பட்ட விபத்து குறித்து தகவல் அறிந்த உடன் முதலமைச்சர் அவர்கள் தகுந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்கள் உயிரிழந்தவர் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக விபத்து நடந்த இடத்தில் கண்காணிப்பு அதிகாரிகள் மூலம் ஆய்வு நடத்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. பாதுகாப்பு நடைமுறைகள் முறையாக செய்யாமல் இருந்தது கண்டறியப் பட்டால் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். நாகப்பட்டினம் இலங்கை இடையே கப்பல் போக்குவரத்து நடந்து வருகிறது. ராமேஸ்வரத்தில் இருந்து கொழும்புவிற்கு கப்பல் போக்குவரத்துக்கு அனுமதி கேட்கப்பட்டுள்ளது. ரூ.160 கோடி நிதியும் ஒன்றிய அமைச்சர் சார்பானந்த சோனாவளிடம் கேட்டுள்ளோம். தமிழக அரசின் நிதி ஆதாரங்களைக் கொண்டு ஒன்றிய அரசு நிதி தராமலே நாங்கள் சிறப்பாக திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். ஒன்றிய அரசு போதுமான நிதி வழங்கினால் இதைவிட சிறப்பாக செயல்படுவோம்

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார், நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான், மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜூ உள்பட பொதுப்பணித்துறை அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

அறிவார்ந்த சமூகமே நல்லதொரு தமிழ்நாட்டை உருவாக்கி தரும்!

# மாணவர்கள் சமூக வலைதளங்களுக்குள் சிக்கி சீரழிந்தால் மாணவ பருவம் வீணாகி விடும்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் அறிவுரை!



தினகரன்
மே 5, 2025 திங்கட்கிழமை

அறிவியலே பிரதானம்

தமிழ்நாட்டின் உயர்கல்வித்துறை வியத்தகு வகையில் வளர்ச்சியை பெற்று வருகிறது. இந்தியாவின் தலைசிறந்த 100 கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் பட்டியலை எடுத்து பார்த்தால், அதில் ஐந்தில் ஒரு பங்கு தமிழ்நாட்டில்தான் இருக்கும். நாட்டிலேயே ஆராய்ச்சி படிப்பை உரிய முறையில் மேற்கொண்டு முனைவர் பட்டம் பெறுகிற மாணவர்கள் எண்ணிக்கையும் தமிழகத்திலேயே அதிகம் உள்ளது.

இவ்வாறாக உயர்கல்வித்துறையில் உச்சாணி கொம்பில் இருக்கையில், தமிழ்நாட்டு கல்வி நிலையங்களை காவி மயமாக மாற்றி விடலாமா என்ற எண்ணத்திலும், அங்கு மூட நம்பிக்கை கருத்துகளை விதைக்கவும் ஒன்றிய அரசு மறைமுக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கு ஆளுநர் போன்ற ஊதுகுழல்களை அடிக்கடி பயன்படுத்தியும் வருகின்றனர்.

மக்களுக்கு தேவையான திட்டங்களை மாநில அரசு தீட்டும்போதும், மாணவர்களுக்கு தேவையான கல்விமுறையை திராவிட மாடல் அரசு அறிவுறுத்தும்போதும் அதற்கு தடைக்கல்லாக நிற்பதே ஆளுநரின் வேலையாக உள்ளது. நீட் தேர்வுகள் தொடங்கி, கல்வி நிதி நிறுத்தம், குலக்கல்வி முறையை புகுத்துதல், சனாதன தர்மத்தை போதித்தல் என ஒன்றிய அரசும், அதன் ஏஜெண்டான ஆளுநரும் தமிழ்நாட்டில் உயர்கல்

சென்னை, மே. 6-

அறிவார்ந்த சமூகமே நல்லதொரு தமிழ்நாட்டை நமக்கு உருவாக்கி தரும். மாணவர்கள் சமூக வலைதளங்களுக்குள் சிக்கி சீரழிந்தால் மாணவ பருவம் வீணாகி விடும் என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் மாணவர்களுக்கு அறிவுரை கூறியுள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாட்டின் உயர்கல்வித்துறை வியத்தகு வகையில் வளர்ச்சியை பெற்று வருகிறது. இந்தியாவின் தலைசிறந்த 100 கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் பட்டியலை எடுத்து பார்த்தால், அதில் ஐந்தில் ஒரு பங்கு தமிழ்நாட்டில்தான் இருக்கும். நாட்டிலேயே ஆராய்ச்சி படிப்பை உரிய முறையில் மேற்கொண்டு முனைவர் பட்டம் பெறுகிற மாணவர்கள் எண்ணிக்கையும் தமிழகத்திலேயே அதிகம் உள்ளது. இவ்வாறாக உயர்கல்வித்துறையில் உச்சாணி கொம்பில் இருக்கையில், தமிழ்நாட்டு கல்வி நிலையங்களை காவி மயமாக மாற்றி விடலாமா என்ற எண்ணத்திலும், அங்கு மூட நம்பிக்கை கருத்துகளை விதைக்கவும் ஒன்றிய அரசு மறைமுக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

அதற்கு ஆளுநர் போன்ற ஊதுகுழல்களை அடிக்கடி பயன்படுத்தியும் வருகின்றனர். மக்களுக்குத் தேவையான திட்டங்களை மாநில அரசு தீட்டும்போதும், மாணவர்களுக்குத் தேவையான கல்விமுறையை திராவிட மாடல் அரசு அறிவுறுத்தும் போதும் அதற்கு தடைக் கல்லாக நிற்பதே ஆளுநரின் வேலையாக உள்ளது. நீட் தேர்வுகள் தொடங்கி, கல்வி நிதி நிறுத்தம், குலக் கல்வி முறையை புகுத்துதல், சனாதன தர்மத்தை போதித்தல் என ஒன்றிய அரசும், அதன் ஏஜென்டான ஆளுநரும் தமிழ்நாட்டில் உயர்கல்வியை எப்படியெல்லாம் சீர்குலைக்க முடியுமோ, அந்தளவுக்கு தங்கள் அதிகாரத்தை பயன்படுத்தி மாணவ மனோநிலையை மாற்றி வருகின்றனர்.

ஆனால் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாணவர்கள் மத்தியில் அறிவியல் சார்ந்த கல்வி மற்றும் சமூகநீதி சார்ந்த பகுத்தறிவு முறைகளை மட்டுமே முன்னிலைப்படுத்தி வருகிறார். அதன் விளைவாகவே நான் முதல்வன் திறன் பயிற்சி திட்டம், கல்லூரி கனவு திட்டம், சிகரம் தொடு திட்டம், புதுமைப்பெண் மற்றும் தமிழ் புதல்வன் உள்ளிட்ட அற்புதமான திட்டங்கள் மாணவர்களுக்கு கிடைத்தன. இவற்றின் மூலம் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெற்றும் வருகின்றனர். உலகத்தரம் வாய்ந்த உயர்கல்வி, வேலைவாய்ப்புகளுக்கான முன்னெடுப்பு ஆகியவை மட்டுமே மாணவர்களை வருங்காலத்தில் வளப்படுத்தும்.

அதை விடுத்து சனாதன முறைகளுக்கு சாமரம் வீசும் விஸ்வகர்மா திட்டம், தேசிய கல்வி கொள்கைகள் மாணவர்களுக்கு வெறும் பிம்பத்தை மட்டுமே ஏற்படுத்த முடியும். தமிழக முதல்வர் சுட்டிக்காட்டுவது போல, நம்முடைய கல்வி நிலையங்கள் பகுத்தறிவுக்கு மாறான மூடநம்பிக்கைகளை பரப்புகிற இடமாக இருக்கவே கூடாது. அறிவியல் அணுகுமுறை மற்றும் சமூக நீதிக்கான தேடலே நம் மாணவர்களை உயர் கல்வியில் உயர்த்தும். கல்வி கூடங்களில் மூடநம்பிக்கைகளை விதைக்கிற பேச்சுகளை அனுமதிக்கவே கூடாது.

இந்திய இளைஞர்கள் மத்தியில் சமீபகாலமாக படிக்காமலே பெரிய ஆளாகும் மனோபாவமும் வளர்ந்து வருகிறது. அதற்காக கல்வியை முன்னிலைப்படுத்துவதை தவிர்த்துவிட்டு, இன்ஸ்டாகிராம், ரீல்ஸ், யூடியூப் ஆகியவற்றை சம்பாதிக்கும் வழிமுறைகளாக மிகைப்படுத்துவதும் தவறாகும். சமூக வலைதளங்கள் மூலம் லட்சம், லட்சமாக சம்பாதிக்கலாம். சோசியல் மீடியாவில் சாதிக்கலாம் என பல்வேறு புனை கதைகளும் மாணவர்கள் மத்தியில் புகுத்தப்பட்டு வருகின்றன.

மாணவர்கள் படிக்கும் காலத்தில் இவற்றையெல்லாம் ஓரம் கட்டி வைத்து விட்டு, அறிவியல் சார்ந்த கல்வி ஒன்றே பிரதானம் என்ற முடிவுக்கு வருதலே நலம். சமூக வலைதளங்கள் சாதி, மதம், இனம் என பலரை குறுகிய வட்டத்திற்குள் கொண்டு அடைப்பதும் உண்டு. இவற்றுக்குள் விழுந்து சிக்கி சீரழிந்தால், மாணவ பருவம் வீணாகிவிடும். அறிவார்ந்த சமூகமே நல்லதொரு தமிழ்நாட்டை நமக்கு உருவாக்கி தரும் என்பதை உணரவேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாகை ஆர்.ஜி. பக்கிரிசாமி
### மே 6 (2024)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு, சிறுவயது முதலே திராவிட இயக்கத்தில் பற்றுடையவராகவும், தஞ்சை டெல்டா மாவட்டத்தில் திராவிட சுயமரியாதை உணர்வோடு கழகத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

ஒருங்கிணைந்த நாகை மாவட்டத்தில் மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் – நாகை ஒன்றிய பொறுப்பாளர் – ஒன்றிய துணை செயலாளர் – ஊராட்சி செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

விவசாயம் சங்க தலைவர், ஊராட்சி மன்ற தலைவராகவும் பல ஆண்டுகள் சிறப்பாக பணி செய்தவர்.

தலைமைக் கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா எஸ்.பி.தங்கையா
### மே 6 (2014)



நாகை மாவட்டக் கழக முன்னோடி, தலைமைச் செயற்குழு உறுப்பினர், நாகை ஒன்றியச் செயலாளராக 20 ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றியவர்.

நாகை மாவட்ட துணைச் செயலாளர், மாவட்டப் பொறுப்பாளர், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் உள்ளிட்ட கழகப் பொறுப்புகளை ஏற்று திறம்பட பணியாற்றியவர்.

சின்னத்தும்பூர் ஊராட்சி மன்றத் தலைவராக நான்கு முறையும், நாகை ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் நலப்பணிகளை மேற்கொண்டவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர். அதுமட்டுமல்லாமல் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

கழகத் தோழர்களால் அன்பாக ‘எஸ்பிடி’ என அழைக்கப்பட்டவர். தலைவர் கலைஞர் அவர்களால் ‘வேளாங்கண்ணி தங்கையா’ என அழைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**